செ.வெ.எண்.201 நாள்.4.03.2010

**நிதித் (வழிவகை) துறை, நாள் : மார்ச் 4, 2010**

**<u>பத்திரிகைச் செய்தி</u>**

மொத்தம் ரூபாய் **1398.960** கோடி மதிப்புள்ள பங்குகள் வடிவிலான **10** ஆண்டுப் பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை–கோட்டை அலுவலகத்தில் மார்ச் **9, 2010** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் **10.30** மணியிலிருந்து பிற்பகல் **12.30** மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள்ளாகவும் பேர வணிகம் செய்தல் திட்டத்தில் (Negotiated Dealing System) மின்னணு படிவத்தில் (electronic format) மார்ச் **9, 2010** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**கு.ஞானதேசிகன்,**
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, சென்னை–9.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9